# சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்
# MCOP .No. 109/2023

**நாள் : 13.10.2025**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பிரபாகரன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை பெயர் | : | திரு. முனுசாமி | வயது | : | |
| ஊர் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தானது 22.12.2022ல் நடந்தது. அப்போது மணி இரவு 7.30 இருக்கும். புதுப்பேட்டை–திருப்பத்தூர் மெயின் ரோட்டில் கோணாப்பட்டு என்ற இடத்தில் உள்ள பஸ்டாப்பிற்கு முன்பாக உள்ள ஓட்டலில் டிபன் வாங்க வேண்டி போனேன். அதாவது நான் டிபன் வாங்க மண்ரோட்டில் நடந்து சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி ஓட்டல் சாலைக்கு வலதுபுறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். என்மீது மோதிய வாகனம் TVS XL ஆகும். அதனை ஓட்டி வந்தவர் பெயர் நடராஜ். மேற்படி நடராஜை வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இரவு நேரத்தில் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென சாலையின் வலதுபுறமாக திரும்பி ஓட்டலுக்கு சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு இடது கால் எலும்பு உடைந்துவிட்டது. நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. கார் வாடகைக்காக ரூ.2,000/– கொடுத்ததாக ம.சா.ஆ.8 ஆவணத்தை வழக்கிற்காக வேண்டி தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது நான் எந்த வேலையும் செய்யவில்லை. விபத்திற்கு முன்னர் நான் பெயிண்டர் வேலை செய்து மாதம் ரூ.30,000/– சம்பாதித்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மீது மோதியதாக சொல்லப்படும் TVS XL வாகனம் 1ஆம் எதிர்மனுதாரர் 17.01.2021லேயே திருப்பத்தூர் TVS பாலமுருகன் ஏஜென்சிஸ் நிறுவனத்திற்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாலமுருகன் ஏஜென்சிஸ்சை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் இந்த மனு தள்ளுடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயம் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகன உரிமையாளர் அல்ல என்பதால் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தானது திடீரென நான் சாலையை கடந்ததால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சாலையில் வரும் வாகனத்தை கவனித்து நின்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக போனேன். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம். சாட்சி பின்னிட்டு தனது சகோதரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக கூறுகிறார். பூபதி எனது சகோதரர் ஆவார். 31.12.2022அன்று எனது சகோதரர் கிராமிய காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 27.12.2022ஆம் தேதிதான் அட்மிட் ஆனேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 மருத்துவ விடுப்பு சான்றிதழில் 27.12.2022ஆம் தேதிதான் அட்மிட் ஆனதாக கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 29.12.2022அன்று எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது காலில் பொருத்தப்பட்டுள்ள ராடு தற்போதுவரை நீக்கப்படவில்லை. 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரிடம் வாகனத்தை கொடுத்து விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் 1ஆம் எதிர்மனுதாரரே எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. அதனால் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனமானது நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.